[திருமதி பா. வளர்மதி] [2014 ஜூலை 15

எது உண்மையான நிலவரம் என்பதை திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்தான் இந்த அவைக்கு விளக்க வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் பதில் சொல்கிறார். பேசாமல் இருங்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை தொகுதியிலே 11-7-2014 முதல் தொடர்ந்து மழை பெய்து வருவதாக மாண்புமிகு உறுப்பினர்கள் இம்மாமன்றத்தில் தெரிவித்தார்கள். பொதுவாக அந்தப் பகுதியில்* winter season-*ல் 49.3 மி.மீ. மழையும், கோடைக் காலங்களில் 17 மில்லி மீட்டர் அளவும், சாதாரண காலங்களில் 123 மில்லி மீட்டர் அளவும் மழை பொழிகின்றது. தற்போது 154 மில்லி மீட்டர் அளவு மழை பொழிந்து கொண்டிருக்கிறது.*

முற்பகல் 11-15

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. மழையின் அளவை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல் அங்கே நிலச் சரிவோ, சாலைகளில் சேதம் போன்ற எந்தவிதமான பாதிப்போ இதுவரை ஏற்படவில்லை. இருந்தபோதிலும், மழையின் அளவை உன்னிப்பாகக் கவனித்து, தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மாவட்ட நிருவாகத்திற்கு உத்தரவிட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், பொது*

நிறுவனங்கள் குழுத் தலைவர். (குறுக்கீடு) அனைவரும் உட்காருங்கள். நாளை பார்த்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) இன்று போதும். நாளை பார்த்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் அளித்துவிட்டார்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) நாளை பார்த்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) நாளை பார்த்துக்கொள்ளலாம். அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடு) நாளை பார்த்துக்கொள்ளலாம். அனைவரும் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன் அவர்கள்.

திரு. பி.ஜி. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டமே தமிழகம் நோக்கி வியந்து உற்று பார்க்கும் வகையில், நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் கூட்டணியே இல்லாமல், துணிச்சலோடும், தன்னம்பிக்கையோடும் தன்னந்தனியாக நின்று (மேசையைத் தட்டும் ஒலி) 37 இடங்களைக் கைப்பற்றி, நாடாளுமன்ற மக்களவையில் மூன்றாவது பெரிய கட்சியாக உருவாக்கி, இமாலய சாதனை படைத்த, சரித்திர சாதனையாளர் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

2013-2014 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்து ஐந்து முதல் எழுபத்து ஐந்து வரையிலான 11 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

4. மானியக் கோரிக்கைகள், 2014-2015, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 45 – சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

(ஆ) கோரிக்கை எண் 52 – மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

— — —

(அ) கோரிக்கை எண் 45 – சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2014-2015 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும்.